# அறிமுகம்

## 1. தாய்மொழியில் எழுதுதல்: எளிமையானதல்ல, ஆனால் இன்றியமையாதது

குடியகன்ற பெற்றோர், பேரன் பேர்த்தியருடைய பெரும்பாலான பிள்ளைகளுக்கும் இளையவர்க்கும் தங்களுடைய முதல்மொழியில் அல்லது தாய்மொழியில் எழுதுவது மிகவும் கடினமானது அல்லது முடியாததாகும். இத்தகு எழுத்துத் திறன்களைப் பள்ளியிலே மேம்படுத்த முடியாவிட்டால் குறிப்பிட்ட இப்பிள்ளைகள் தங்கள் முதல்மொழியிலே அறிவிலிகளாகவே இருப்பர். தங்கள் பாரம்பரியமொழியினைச் செம்மையற்ற முறையில், பெரும்பாலும் பேச்சுமொழி வடிவில், பேசிக்கொண்டிருக்கும்போது அவர்கள் தங்கள் எழுத்துப் பண்பாடுடனான தொடர்பை இழக்கின்றனர். இது, விரைவில் அல்லது பின்னர் தம்முடைய முதல் மொழியினை முற்றாக, அதனுடன் இன்றியமையாத சிறப்புத் தகைமை, அவர்களுடைய இரு பண்பாட்டு அடையாளத்தின் உட்பகுதி என்பவற்றை இழக்கும் பேரிடரைக் கூட்டுகின்றது. ஈரறிவுத் தகைமைகளை (ஒருவர் தன் முதல் மொழியில் படித்தல் மற்றும் எழுதும் திறன்) மேலும் வளர்த்தல் என்பது இருபண்பாட்டு-இருமொழி அடையாளத்தின் நடுநிலையான உட்கட்டமைப்பு மேம்பாட்டிலும் உள்ள குறிப்பிடத்தக்க ஈடுபாடுமாகும்.
பாரம்பரியமொழிக்கல்வி (சுவிற்சர்லாந்தில் HSK கற்கைகள்) இத்தகைய தகைமைகளை மேம்படுத்துதற்கு உறுதியான பங்களிப்பினை செய்யலாம். கல்வியில் பின்தங்கிய பிள்ளைகளுக்கு, தம் நாட்டு மொழியினை எழுத்து வடிவிலும் அதன் எழுத்து வடிவிலும் கற்பதற்கும், எழுத்துப் பண்பாட்டினை உள்ளடக்கிய உள்ளீட்டு இருமொழி அறிவினைப் பெறுவதற்கான ஒரே வாய்ப்பினை இது குறித்துக்காட்டுகிறது.

## 2. இவ் வெளியீட்டின் குறிக்கோள்களும் கட்டமைப்பும்

இந்த வெளியீடு பாரம்பரியமொழிக்கல்வி ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் தற்காலக் கல்வியடிப்படையில் மகிழத்தக்கதாகவும் ஈடுபாடு கொள்ளத்தக்கதாகவும் முதல் மொழியில் எழுத்துத் தகைமைகளை மேம்படுத்தத் துணைசெய்கிறது. பாட எழுத்தாக்கம் பற்றிய கற்பித்தற் திறவுப் பண்புகளுக்கான அறிமுகத்தினைத் தொடர்ந்து பெருந்தொகையான குறிப்பிட்ட கற்பித்தல் முன்மொழிவுகளும் பரிந்துரைகளும் இடம்பெறுகின்றன.

தற்போதைய இத்தொகுதி, பல மாணவர்கள் குறைந்தது தொடக்க நிலையில் குறிப்பிடத்தக்க தடங்கல்களை அடைவதை இனங்கண்டு எல்லா வயது நிலையிலும் எழுதுதற்கான ஈடுபாட்டினை மேம்படுத்தும் எளிமையான விளையாட்டு வடிவங்களின் தொகுப்புடன் தொடங்குகின்றது. உள்நோக்குக்கு இணங்க மதிநுட்ப அறிவானது உண்மைகளின் அறிவைப்போன்று இன்றியமையாததாகும். பகுதி II எழுத்துருவாக்கத்தின் பல்வேறு கட்டங்களில் மாணவர்களுக்குத் துணைசெய்யத்தக்க உத்திகளையும் மதிநுட்பங்களையும் வழங்குகிறது. பகுதி III, எழுத்துரு அல்லது நடையை மேம்படுத்தல், சொற்களஞ்சிய மேம்பாடு என்னும் பகுதிப் பண்புகளின் பல்வகை உருப்படியான கருத்துகளை உள்ளடக்கியது. பாரம்பரியமொழிக்கல்வியின் சந்தர்ப்பம் மற்றும் ஒழுங்கான வகுப்பறைக் கற்பித்தல் அல்லது கலை-ஆக்கச் செயற்றிட்டங்களின் கூட்டுநிலை ஆகியவற்றுக்குக் கருப்பொருள் அடிப்படையில் குறிப்பாகப் பொருத்தமான மதியுரைகள் மற்றும் எண்ணக்கருக்கள் அணியினைக் கடைசிப் பகுதி உள்ளடக்குகிறது.
ஒவ்வொரு பரிந்துரைகளையும் விரைவில் புரிந்துகொள்ளவும், செயற்படுத்தவும் எவ்வகை பிரிவினருக்கு, (தனியாள் பயிற்சி தொடக்கம் குழு, முழு வகுப்பு வரைக்கும்) எவ்வயதினருக்கு, (எ.கா. 3-7 ஆம் வகுப்பு ) நேரத்தேவை பற்றியும் இந்நூல் தெளிவாக விளக்குகிறது. தரப்பட்ட பரிந்துரைகளின் நோக்கத்தையும் பயிற்சி செய்யும் முறைகளையும் மிகத்தெளிவாகவும் இலகுவாக புரியும்படியும் விளக்கப்பட்டுள்ளது மேலும் இவை பல ஆசிரியர்களாலும் ஆராயப்பட்டு பெரும்பகுதி செய்முறைத் தேர்வுக்கும் உட்படுத்தப்பட்டன.

## 3. எழுத்துரு எழுதுவதற்கான தற்போதைய கற்பித்தலில் பயன்படுத்தப்படும் முக்கிய விடயங்கள்

பின்வரும் குறிப்புகள் ஜேர்மன் – பேசும் இடங்களில் தற்போதைய எழுத்துக் கற்பித்தலைச் சார்ந்ததாகும், ஆனால் இயல்பாக பன்னாட்டு மேம்பாடுகளையும் உருக்காட்டுகின்றன. கடந்த 30 ஆண்டுகளின் எண்ணக்கரு "கட்டுரை எழுதப் பயிற்சியளித்தல்" என்னும் முன்னைய தொடருக்குப் பதிலாக "பாட எழுத்தாக்கக் கற்பித்தல" என்னும் தொடரால் ஏற்கெனவே சான்றாகியுள்ளது. வழக்கமான பள்ளிக் கட்டுரைக்கு மேலான இத்தொடரின் ஓர் விரிவான விளக்கத்தினை இது உள்ளடக்குகிறது. தற்கால எழுத்துக் கற்பித்தலின் திறவுப் பண்புகளுள் (பெரும்பாலான பாரம்பரியமொழி ஆசிரியர்கள் தம்முடைய பயிற்சியில் பெற்றதை விட வேறுபட்டதாகலாம்) ஐந்து குறிப்புகள் பின்வருவன. இவை பாரம்பரியமொழிக் கல்விச் சூழலில் ஆராயப்படும், அத்துடன் 4ஆம் இயலில் இத்தகைய கற்பித்தலுக்கு மேலும் பொருத்தமான குறிப்புகளுடன் நிறைவுசெய்யப்படும்.